## சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிதியம் 2011

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 பெகறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

ரூபா 143,504 பெறுமதியான 07 மதிப்பிழந்த காசோலைகள் 02 ஆண்டுகளிலிருந்து 07 ஆண்டுகள் வரையான வீச்சுடைய காலமாக நிலுவையாக காணப்பட்ட போதிலும் நிதிப்பிரமாணம் 189 இன் பிரகாரம் இக் காசோலைகளின் பெறுமதியிளை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச் சட்டத்தின் 24(2) ஆம் பிரிவு, 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் பகுதி ஐஐ என்பவற்றின் பிரகாரம் சுற்றுலாத்துறை அபிவிருத்தி தீர்வைகளைச் சேகரிப்பது தொடர்பான திரட்டுக்கள் (ரீடீஎல்) சுற்றுலாத்துறை அபிவிருத்தி தீர்வைகளின் சேகரிப்பின் பின்னர் 30 நாட்களுக்குள் திறைசேரியின் பிரதிச் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனினும், நிதியம் அந்த வேண்டுதலுடன் இணங்கி நடக்கத் தவறிவிட்டது.

(ஆ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச் சட்டத்தின் 24(2) ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றாத்துறை அபிவிருத்தி தீர்வைகளின் விபரங்களைக் குறிப்பிட்டு பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய நிதியத்தின் நடவடிக்கைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 1,695 மில்லியனாக இருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டிற்கான தொடர்புபட்ட வருமானம் ரூபா 1,517 மில்லியனாக இருந்தமையானது நிதிசார் விளைவுகளில் ரூபா 178 மில்லியன் தொகையினால் முன்னேற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது.

### 2.2 நிதியத்தினை முகாமை செய்தல்

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். நிதியத்தின் முகாமைத்துவம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒவ்வொரு உத்தரவு பெற்ற நிறுவனத்தின் புரள்வு மீது 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை அபிவிருத்தி தீர்வை சேகரிக்ககப்படுதல் வேண்டும். என்றும், 2372 உத்தரவு பெற்ற நிறுவனங்களில் 1089 உத்தரவு பெற்ற நிறுவனங்களிடமிருந்து சுற்றுலாத்துறை அபிவிருத்தி தீர்வை சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை வைத்திருக்காத பணம் பெறுனருக்கு ரூபா 492,490 தொகையான சுற்றுலாத்துறை அபிவிருத்தி திர்வை மீளச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நிதியத்தினால் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபைக்கு நிர்வாகச் செலவுகளாக ரூபா 3,343,507 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், நிர்வாகச் செலவுகனைச் செலுத்துவதற்கு 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச் சட்டத்தில் ஏற்பாடுகள் இருக்கவில்லை. சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் (எஸ்எல்ரீடிஓ) தலைவர் 2012 மே 02 ஆந் திகதி எனக்கு பின்வருமாறு தெரிவித்திருந்தார்.

‘‘அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிதியமானது இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்வகிக்கப்பட்டு முகாமை செய்யப்படுதல் வேண்டும். இந் நோக்கத்திற்காக ஊழியர்களின் சம்பளங்கள், தரவு செயன்முறைப்படுத்தல், சொத்துக்களின் பெறுமானத் தேய்வு எழுது கருவிகள் முதலியவாறான செலவுகளை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபை மேற்கொள்கின்றது. அத்துடன் நிதியத்திலிருந்து பண அளிப்புக்களைப் பெறுகின்ற வேறு எந்த நிறுவனமும் செலவுகளை மேற்கொள்ள மாட்டாது. இந்த விடயத்தைக் கருத்தில் கொண்டு அனைத்து நான்கு நிறுவனங்களும் பகிர்ந்து கொள்ளக்கூடிய வகையில் நிதியத்திலிருந்து நியாயமான கட்டணம் ஒன்றினை அறவிடுவதற்கு இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் இயக்குனர் சபை தீர்மானித்திருந்தது.

## 2.3 உள்ளகக் கணக்காய்வு

நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும், நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் எதுவும் மீளாய்வாண்டின் போது மேற் கூறிய கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகார சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிகளை பகிர்ந்தளித்தல்
(இ) சுற்றுலாத்துறை அபிவிருத்தி தீர்வைகளின் சேகரிப்பு
(ஈ) உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல்
(உ) உத்தரவு பெற்ற நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்தல்